செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 21.07.2022

**செய்தி வெளியீடு**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100): யூன் 2022**


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**


2022 யூன் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 58.9% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2022 மே மாதம் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 45.3% ஆக காணப்பட்டது. 2022 யூன் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே 36.0% மற்றும் 22.9% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 6.1% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2021 யூன் மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புக்கள் முறையே 4.5% மற்றும் 1.6% ஆக காணப்பட்டன. 2021 யூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2022 யூன் மாதம் பொருட்டு அதிகரித்த பணவீக்கம் பதிவாகியமைக்கான பிரதான காரணம், உணவு மற்றும் உணவல்லாப் பிரிவு இரண்டிலும் நிலவிய உயர்வான விலை மட்டங்களாகும். அதற்கிணங்க, உணவுப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2022 மே மாதத்தில் பதிவாகிய 58.0% இருந்து 2022 யூன் மாதத்தில் 75.8% வரை அதிகரித்தது என்பதுடன் உணவல்லாப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2022 மே மாதத்தில் பதிவாகிய 34.2% இருந்து 2022 யூன் மாதத்தில் 43.6% வரை அதிகரித்தது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2022 மே மாதத்தில் பதிவாகிய 208.7 இருந்து 2022 யூன் மாதத்தில் 231.5 வரை அதிகரித்துள்ளது. இது, 2022 மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 22.8 சுட்டெண் புள்ளிகள் அல்லது 10.9 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 7.2% இனாலும் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 3.7% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்புக்கள் பிரதானமாக அரிசி, மரக்கறி, உடன் மீன், சீனி, பால் மா, கருவாடு, மைசூர் பருப்பு, கோழி இறைச்சி, பாண், முட்டை, மிளகாய்த்தூள், உருளைக்கிழங்கு, விசுக்கோத்து, குழந்தைப் பால் மா, ரின் மீன் செத்தல் மிளகாய், கோதுமை மா, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், பச்சை மிளகாய், கறித்தூள், தேயிலை துகள்/இலை, பணிஸ் வகைகள், புதிய பழங்கள், நூடுல்ஸ், வெள்ளைப்பூடு, சோயா மீட், மாட்டிறைச்சி மற்றும் கடலை என்பன பொருட்டு பதிவாகின. எனினும், சுட்டெண் பெறுமதியில் விலை குறைவு தேங்காய் எண்ணெய் பொருட்டு பதிவாகியது.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 யூன் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு பிரதான காரணம், 'அற்ககோல் பானங்கள், புகையிலை & தியக்க மருந்துகள்'(சாராயம்), 'ஆடையும் காலணியும்', 'வீடமைப்பு,நீர்,மின்வலு,எரிவாயு,ஏனைய எரிபொருள்கள்'(பராமரிப்புக்கான பொருட்கள், சமையல் எரிவாயு மற்றும் விறகு கொள்வனவு), 'தளபாடம், குடித்தன உபகரணம் & வழமையான குடித்தன பராமரிப்பு' (சலவைச் சவர்க்காரம்) , 'சுகாதாரம்', 'போக்குவரத்து'(பெற்றோல், டீசல் மற்றும் பஸ் கட்டணம்), 'தொடர்பாடல்' (தொலைபேசிக் கட்டணம்-கையடக்க தொலைபேசி) 'பொழுதுபோக்கும் கலாசாரமும்'(புத்தகங்கள், செய்தித்தாள்கள்), 'உணவகங்களும் ஹோட்டல்களும்' அத்துடன் 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' (சிங்காரிப்புச் சவர்க்காரம், கார் காப்புறுதி) ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். அதேநேரம், 'கல்வி' பிரிவின் விலைச் சுட்டெண் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டது.

2022 யூன் மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2022 மே மாதத்தில் பதிவாகிய 37.7% இருந்து 49.3% வரை அதிகரித்துள்ளது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) |
| | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் | | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் |
| 2021 | யூன் | 145.7 | 157.3 | 136.5 | 144.6 | 1.5 | 0.6 | 6.1 | 9.8 | 2.9 | 4.1 |
| | யூலை | 146.6 | 158.5 | 137.2 | 145.6 | 0.6 | 0.7 | 6.8 | 11.0 | 3.2 | 4.4 |
| | ஓகஸ்ட் | 147.1 | 159.4 | 137.4 | 146.5 | 0.3 | 0.6 | 6.7 | 11.1 | 3.0 | 4.7 |
| | செப்ரெம்பர் | 147.5 | 159.6 | 137.9 | 147.2 | 0.3 | 0.5 | 6.2 | 10.0 | 3.0 | 4.8 |
| | ஒக்ரோபர் | 150.6 | 162.6 | 141.2 | 150.6 | 2.1 | 2.3 | 8.3 | 11.7 | 5.4 | 7.2 |
| | நவம்பர் | 155.3 | 171.5 | 142.6 | 153.0 | 3.1 | 1.6 | 11.1 | 16.9 | 6.2 | 8.8 |
| | டிசம்பர் | 161.0 | 182.1 | 144.5 | 155.7 | 3.7 | 1.8 | 14.0 | 21.5 | 7.6 | 10.8 |
| 2022 | ஜனவரி | 166.0 | 188.3 | 148.4 | 159.2 | 3.1 | 2.2 | 16.8 | 24.4 | 10.2 | 12.9 |
| | பெப்ரவரி | 167.8 | 190.6 | 149.8 | 161.2 | 1.1 | 1.3 | 17.5 | 24.7 | 11.0 | 14.1 |
| | மார்ச் | 172.7 | 195.2 | 154.9 | 166.3 | 2.9 | 3.2 | 21.5 | 29.5 | 14.5 | 17.3 |
| | ஏப்ரல் | 190.3 | 218.8 | 167.9 | 182.3 | 10.2 | 9.6 | 33.8 | 45.1 | 23.9 | 27.9 |
| | மே | 208.7 | 242.2 | 182.4 | 197.9 | 9.7 | 8.6 | 45.3 | 58.0 | 34.2 | 37.7 |
| | யூன் | 231.5 | 276.6 | 196.0 | 215.9 | 10.9 | 9.1 | 58.9 | 75.8 | 43.6 | 49.3 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்